REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE : 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்..அண்ணதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

போலீஸ்காரர்களுக்கு நாட்டியப் பயிற்சி!

பாட்ஞ, ஜன. 9—

பீகார் மாநில போலீஸ் இலாகா கான்ஸ்டேபிள்களை நடனம், நாடகம், சங்கீதம் ஆகிய கலைத்துறைகளில் பங்கு எடுத்து அக்கரை காட்டுவதற்கான நடவடிக்கைகளைமேற்கொள்ள மாநில போலீஸ் இலாகாவினர் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளனராம்.

இந்நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதால், போலீஸ் கான்ஸ்டேபிள்களிடையே நாட்டுப் பற்றையும், சர்க்காரிடம் விசுவாசத்தையும் புகுத்திவிடலாம் என்று அந்த இலாகா அதிகாரிகள் கருதுகின்றனராம்.

மலர் 2] சென்னை: மார்கழி 21உ செவ்வாய் (11—1—55) ★ ★ வெளியூர்: மார்கழி 28உ புதன் (12—1—55) [இதழ் 181

எழில் மிகு மதுரையில் எழுச்சி முரசு!

சமூக சீர்திருத்த மாநாடு

சமூக சீர்திருத்த மாநாடு 8—1—55 சனியன்று காலை 10 மணியளவில், தோழியர் பி. எஸ். செல்வா குழுவினரின் இன்னிசை விருந்துடன் துவங்கியது.

"சுப்ரமணியன் என்ற பெயருடைய ஒருவன் பார்வதி என்ற பெயருடைய ஒரு பெண்ணை மணந்து கொள்கிறான்; புராணப்படி, சுப்பிரமணியனுக்கு பார்வதி தாயாகிறாள்; ஆனால், நாட்டில், பார்வதி தனயனுக்குத் தாரமாகிறாள்; இப்படி 'இந்த லீலா'க்களும், 'சிவ லீலா'க்களும் நாட்டில் நடைபெறுகின்றனவே, இவற்றை யார் கேட்பது? தடுப்பது?" என்ற முழக்கத்துடன் தோழர் தில்லை வில்லாளன் மாநாட்டினைத் துவக்கி வைத்தார்.

அடுத்து, வரவேற்புக் குழுத் தலைவர் எஸ். வி. நொந்தி, 'என் சமூக சீர்திருத்த மாநாடு?' என்ற கேள்விக்கு, விடை தெரிந்துபோக வந்துள்ளோரையும், மற்றோரையும் வரவேற்றுப் பேசிவிட்டு, தோழியர் சத்தியவாணிமுத்து அவர்களை மாநாட்டிற்குத் தலைமை தாங்கி நடத்தித்தருமாறு கேட்டுக்கொண்டு முன்மொழிந்தார்.

அதனை வழிமொழிந்து, "ஒரு நாட்டில் பெண்கள் திருந்திவிட்டால் நாடே திருந்திவிட்டது போலாகும் என்ற உண்மைக்கொப்பவே ஒரு பெண்மணியை சமூக சீர்திருத்த மாநாட்டிற்குத் தலைமை தாங்க தேர்ந்தெடுத்துள்ளோம்" என்பதாக மதுரை மாவட்டத் தோழர்களான பேக்கர், பி. எஸ். மணியன், வசனப்பித்தன், சமதர்மம், ஆவுடையப்பன் ஆகியோர் பேசினர்.

"மதச் சார்பற்ற சர்க்கார் என்பது ஏட்டளவில்தான்—நடைமுறையில் இல்லையே! சென்னை அரசாங்கத்தின் முத்திரைச் சின்னம் ஒரு கோவில்—இந்து மதச் சிறப்புடன் கூடிய கோவில்; இதற்குப் பெயர், மதச் சார்பற்றதென்பதா?"

இப்படிக் கேள்விகளை எழுப்பி, இன்றைய காங்கிரஸ் அரசாங்கத்தின் பிற்போக்குத் தன்மையையும், சொல்வேறு — செயல் வேறுயுள்ள நடைமுறையையும் இடித்துக்காட்டி, புதுமைக் கருத்துக்களையும், கொள்கைகளையும் ஏற்றுக்கொள்ள சமூகத்தை தயார் செய்வதே கழகம் செய்து வரும் சீர்திருத்தப் பணியின் நோக்கம் என்பதையும், தனது தலைமையுரையில் குறிப்பிட்டார்—தோழியர் சத்தியவாணிமுத்து அவர்கள்.

அடுத்து அருப்புக்கோட்டைத் தோழர் எம். எஸ். இராமசாமி அவர்கள், 'மதத் தத்துவம்' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றுகையில், இந்து மதம், கிறிஸ்துவ மதம், முஸ்லிம் மதம், பௌத்த ஜைன

(4-ம் பக்கம் பார்க்க)

அரை லட்சம் வீரர்கள் அணிவகுப்பு

பழமைக் கோவில் மகிமையின் வீழ்ச்சி; புதுமைக் கொள்கைப் பற்றின் வளர்ச்சி!

முன்னணி வீரர்களின் முழக்கம்; மத எத்தர்களின் கலக்கம்!

மதுரை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக மாநாடுகளின் விவரம்

மதுரை மாவட்ட தி.மு.கழக இரண்டாவது சமூக சீர்திருத்த, அரசியல் மாநாடுகள் ஜனவரித் திங்கள் 8, 9-ந் தேதிகளில், மதுரை-ஆரப்பாளையம், ஞானஒளிவுபுரத்தில் அமைக்கப்பட்டிருந்த மிகப் பிரம்மாண்டமான பந்தலில் சீரும் சிறப்புமாக நடைபெற்றன.

மாநாட்டுப் பந்தலுக்கு, மறைந்த மாவீரன் சௌந்திரபாண்டியனாரின் பெயர் தரப்பட்டிருந்தது—மதுரை மாவட்டம், பாண்டியனாரின் பணியை மறந்துவிடவில்லை—என்பதை நினைவூட்டுவதாயிருந்தது.

எழில் மிகுந்த நகர் மதுரை. அந்த அழகு நகரின் அழகுக்கு அழகு செய்தன—தோரணங்களும், வாழ்த்துக் கூறும் வரவேற்பு வளைவுகளும், கழகக் கொடிகளும்! இரு நாட்களும் மதுரை திருவிழாக்கோலம் பூண்டிருந்தது.

சித்திரையில் பௌர்ணமி; வைகாசியில் விசாகம் என்று துவங்கி, பங்குனியில், உத்திரம் என்று முடியும்—மாதந்தோறும் திருவிழா நடைபெறுகின்ற மதுரை மாநகரம்—தேவாரத் திருப்பணியும், திருவாலவாயன் திருநாம பஜனையும் தொடர்ந்து நடைபெறும் மதுரை மாநகரம்—'தெய்வத் திருப்பணி போதும்; மக்கட்பணியாற்றத் திருந்தவும், மக்களைத் திருத்தவும் முற்படு' என்ற மூலக் கொள்கையைப் பரப்பும் முன்னேற்றக் கழக மாநாடுகளுக்காக, அந்த இரு நாட்களிலும் திருவிழாக் கோலம் பூண்டிருந்தது!

புரி நூலார் திரித்த புளுகுகளான புராணத் திருவிழாக்கள், மகிமை இழந்து—மக்கள் ஆதரவை இழந்து வெகு நாட்களாகி விட்டன என்பதற்கு எடுத்துக்காட்டாக இலங்கின—கழகத் தோழர்களும், பொதுமக்களும் சாரை சாரையாய் மாநாட்டுப் பந்தலை நோக்கி பல்லாயிரக் கணக்கில் ஊர்ந்து சென்ற மறக்க முடியாத காட்சிகள்!

அன்று, 'ஆற்றில் அழகர் இறங்குகிறார்' என்றால் ஆயிரமாயிரமாகக்கூடிய மக்கள், இன்று, 'அழகர் ஆற்றில் இறங்கினாலும் சரி—சேற்றில் இறங்கினாலும் சரி, நாட்டில் நாம் வாழ வழி காட்டுபவர் அழகருமல்ல—அம்மை மீனாட்சியுமல்ல—கழகம்தான்' என்று கூறுபவர்போல் மாநாட்டில் கூடியிருந்தனர், ஐம்பதினாயிரம் பேர்!

எட்டு ஆண்டுகளுக்கு முன்—மதுரையில் நடைபெற்ற மாநாட்டின் போது, மாற்றாரால், பந்தல் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது; தோழர்கள் தாக்கப்பட்டனர்; தாய்மார்கள் அவதிக்குள்ளாயினர்; தலைவர்கள், வஞ்சகரின் தீய செயலால் நெஞ்சம் புழுங்கினர்.

இது எட்டு ஆண்டுகட்கு முன்—ஆனால், அன்று நாம் சிலர்—'அவர்கள்' பலர்; இன்று, நிலை வேறு; நாம் பலர்—'அவர்கள்' சிலர்.

'நாமா இவ்வாறு வளர்ந்திருக்கிறோம்' என்று நம்மையே ஆச்சரியத்தில் ஆழ்த்திற்று மதுரை மாநாட்டின் மகத்தான வெற்றி.

திராவிடத்தின் இருபதாம் நூற்றாண்டுப் பிற்பகுதிச் சரித்திரத்துடன் கழகம் பிணைக்கப்பட்டிருக்கிறது என்பதைத்தான் வெற்றி பெற்ற மதுரை மாநாடு முழக்குகிறது.

அந்த வெற்றி முழக்கத்தின் வேகத்தில், மாற்றாரின் மருட்சி, மனவேதனை, இந்த வேதனையால் எழும் விம்மல், 'விடமாட்டேன் பாமரரை—பழமைப் பிடியினின்றும்; அவரைத் தடி கொண்டு தாக்கியேனும் படிய வைப்பேன்; அடியேன் அவதாரமெடுத்ததே அதற்காகத்தான்!'—என்ற வெறிக் கூச்சலின் தோல்வியும், உள்ளடங்கியுள்ளன.

செயல்வீரர் முத்துவும் அவர்தம் அருமைத் தோழர்களும், கருமமே கண்ணாயிருந்து காரியமாற்றி, அத்தகு வெற்றியைத் தேடித் தந்திருக்கின்றனர்-கழகத்திற்கு, எண்ணவும் பயங்கரமான எண்ணற்ற எதிர்ப்புகளைத் தாங்கிக் கொண்டு! (ந. த. நி.)

பாய்ச்சல்!

சோவியத்தைச் சேர்ந்த நாடுகளான சீனா, திபேத், வடகொரியா போன்ற நாடுகளுக்கு, யுத்தத் தளவாடங்களுக்கு வேண்டிய முக்கிய பொருட்களைக் கொண்டு செல்வதில் பிரிட்டனும், அமெரிக்கா உட்பட மற்றும் 14 நாடுகளும், இத்திங்கள் 16-ந் தேதி முதல் மிகக் கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்குமென கூறப்படுகிறது.

மு. கருணாநிதி உடல் நிலை

சென்னை, ஜன. 11—

கடந்த ஒரு வாரகாலமாக கடுமையான கண் நோய்க்கு ஆளாகியிருந்த தோழர் மு. கருணாநிதி, நேற்று சென்னை எழும்பூரிலுள்ள அரசாங்கக் கண் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கிறார். இன்னும் சிறிது நாட்கள் மருத்துவமனையிலேயே இருக்க வேண்டுமென்றும், நல்ல ஓய்வு அவசியமென்றும் டாக்டர் கூறியிருக்கிறார்.

அரசியல் மாநாடு

9—1—55 ஞாயிறன்று மதுரை மாவட்ட தி. மு. கழக 2-வது அரசியல் மாநாடு காலை 10-30 மணியளவில் துவங்கியது. இசைமுரசு நாகூர் அனீபா, தோழியர் பி. எஸ். செல்வா இருவரும் இசை விருந்தளித்தனர்.

மாநாட்டிற்குத் தலைமை தாங்கவிருந்த தோழர் மு. கருணாநிதி அவர்கள், கண்நோய் காரணமாக மாநாட்டில் கலந்துகொள்ள இயலவில்லை; தான் மாநாட்டின் தலைமை உரையாக நிகழ்த்தவிருந்த சொற்பொழிவின் சாரத்தினை மட்டும் எழுதி அனுப்பியிருந்தார்.

(அச்சொற்பொழிவின் விவரம் 2-ம் பக்கத்தில் வெளியாகியுள்ளது.)

வரவேற்புக் குழுச் செயலாளர் தோழர் எஸ். முத்து அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, தோழர் எம். பி. சுப்பிரமணியம், எம். எல். ஏ., அவர்கள் மாநாட்டினைத் திறந்துவைத்து அரியதோர் சொற்பெருக்காற்றினார்.

அடுத்து, வரவேற்புக் குழுத் தலைவர் எஸ். வி. நொந்தி அவர்கள், அனைவரையும் வரவேற்றுப் பேசியதும், தோழர் மு. கருணாநிதி அவர்களுக்குப் பதிலாக தோழர் கோவை இராசமாணிக்கம் அவர்களை மாநாட்டிற்குத் தலைமை ஏற்குமாறு வேண்டினார்; அதனை வழி மொழிந்து தோழர் என். வி. நடராசன் பேசினார்.

தோழர் மு. கருணாநிதியின் சொற்பொழிவை அவர் சார்பில்

(4-ம் பக்கம் பார்க்க)

'அறிவுப் பாதை'யில் செல்பவர்க்கு அணைபோடுவது இயலாது

எண்ணத்தில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை எவரும் உணர வேண்டும்

புதுமை மலர்ச்சியில் புகும் இளைஞர்கள் பற்றி வினோபா

"மாறிக்கொண்டேவரும் ஒவ்வொரு பரம்பரையும் புதுப்புது கருத்துக்களோடு வருகிறது. இளைஞர்கள் வேண்டுமென்றே துடுக்குத்தனமாக நடந்துகொள்கிறார்கள் என்று முதியவர்கள் குறைபட்டுக்கொள்கின்றனர்; ஆனால், உண்மையிலேயே இளைஞர்களெல்லாம் துடுக்குத்தனமாக நடந்துகொள்வதேயில்லை; அவர்கள் துடுக்குத்தனமாக நடந்துகொள்வதற்குக் காரணம், அவர்கள் உள்ளங்களில் புதுப்புது எண்ணங்களும், கருத்துக்களும் மலருவதேயாகும். அவர்களை அடக்கி ஒடுக்க முதியோர் முயன்றாலும் இளைஞர்கள் அவர்களுக்குப் பணிந்துபோவதில்லை; இவ்வாறு அவர்கள் நடந்துகொள்வதாலேயே இளைஞர்களெல்லோரும் துடுக்கானவர்கள், ஒழுக்கமற்றவர்கள் என்று பழிசுமத்தப்படுகிறார்கள்."

இவ்வாறு, ஆச்சாரியா வினோபாபாவே பிஷாவ்பூரில் கூறியிருக்கிறார்.

மேலும் அவர் தொடர்ந்து கூறினார்:—

"தலைமுறை தலைமுறையாக சமுதாயம் மாறிக்கொண்டே போகிறது தலைவர்களும், மக்களும் கூட, 'காலம் மாறுகிறது' என்று கூறுகிறார்கள்.

"தனிப்பட்டோர் நில உடைமையை ரத்து செய்யவேண்டும் என்று கூறுவதற்குச் சில முதியோர் முணுமுணுப்புக் காட்டுவதின் காரணம், மனித எண்ணத்தில் ஏற்பட்டுள்ள புதிய மாற்றத்தை அவர்கள் உணர்ந்துகொள்ளாததேயாகும்."

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை 11—1—1955 செவ்வாய்

ஏட்டிக்குப் போட்டி!

காங்கிரஸ் ஆளவந்தார்களை எதிர்த்து ஒவ்வொரு மாநிலங்களிலும் நடைபெறும் எதிர்ப்புக் கிளர்ச்சிகளுக்கு, மூல காரணஸ்தர்களாக இருப்பவர் காங்கிரஸ் கட்சியினரேயாவர். தாங்கள் செய்யும் செயல்கள் அனைத்தும் நியாயமானவை, மக்கள் நலத்தைப் பேணிக் காப்பவை, அவைகளில் மற்றவர்களால் காணப்படும் குறைகள் அனைத்தும் நியாயமற்றவை, அதிகாரத்தைப் பெற செய்யப்படும் பித்தலாட்டம் அல்லது அதிகாரமில்லாததால் பெற்ற ஏமாற்றத்தின் எதிரொலி என காங்கிரஸ் கட்சியில் பெரும்பாலோர் கருதி வருகின்றனர். சிறுபான்மையினர் என்றென்றும் தாங்களே பதவியில் ஒட்டிக்கொண்டிருக்க வேண்டும் என்ற கெடு நினைப்பில், மேற்காட்டிய நச்சுக் கருத்தை வேண்டுமென்றே பரப்பி வருகின்றனர். இதுவுமன்றி, தாங்கள் ஆளப் பிறந்தவர்கள்—மற்றவர்கள் ஆளப்பட வேண்டியவர்கள் என்ற ஒரு தவறான நினைப்பையும் காங்கிரஸ் தலைவர்கள் தங்களுக்குள்ளாக வளர்த்தும் வருகின்றனர். அவ்வாறே பொது மக்கள் நம்புமாறு, அக்கருத்தை வலியுறுத்தியும் வருகின்றனர்.

காங்கிரஸ் தலைவர்களுடைய இம்மனப்பாங்கு தவறானப் பிரசாரமும், பயங்கரமான விளைவுகளைக் கொண்டிருப்பதுமாகும். இப்பயங்கர விளைவுகள் அரசியல் விழிப்புகொண்ட மக்களையே ஆட்டிப்படைத்திருக்கிறது என்றால், அரசியல் விழிப்பு அறவே வேரூன்றாத நம் மக்களை மேலும் அதிகமான தொல்லைகளுக்கே ஆளாக்கும் என்பதில் யாருக்கும் ஐயமிருக்காது.

நமது மக்களுக்கு அரசியல் விழிப்பு அறவே ஏற்படாததுடன், அவர்கள் யாக்கை நிலையாமை என்ற பொய்யுணர்விற்குக் கட்டுப்பட்டுக் கிடக்கிறார்கள். எனவே, மேலே விளக்கியுள்ள காங்கிரஸ் தலைவர்களின் பொய்ப் பிரசாரம், இன்னும் கூடுதலான கேடுகளையே நம்மவர்களுக்குக் கொடுத்துத்தீரும்.

தங்கள் நடவடிக்கைகளை எதிர்க்க, பொது மக்கள் சார்பில் மற்ற அரசியல் கட்சியினர் மேற்கொள்ளும் நேரடி நடவடிக்கைகளை — அவைகளில் துளியும் பலாத்கார வாடை இல்லாதிருந்த போதிலும்—அறப்போர் என காங்கிரஸ் ஆளவந்தார்கள் ஒப்புக் கொள்வதில்லை. அப்போராட்டங்களை அடக்கு முறை கொண்டு அழிப்பதும், அப்போராட்டங்களில் ஈடுபடும் கட்சியினரை பழித்து இழித்துக் கூறுவதும் காங்கிரஸ் தலைவர்களின் ஜன்ம குணமாகிவிட்டது. இதில் அரசியல் யூகமும் இல்லை; மக்கள் நலம் காக்க வேண்டுமே என்ற நியாய புத்தியுமில்லை.

ஆட்சியினரை எதிர்க்கும் எதிர்ப்புக் குணத்தை கடந்த ஐம்பது ஆண்டுகளாக விதைத்து வளர்த்து வந்தவர்கள் காங்கிரஸ் கட்சியினர்தான் என்ற உண்மையை மைசூர் முதலமைச்சர் கூறியுள்ளதை இதற்கு முன் எடுத்துக் காட்டியுள்ளோம். அதே எதிர்ப்புணர்விற்கு, இன்று அதிகாரத்தில் உள்ள தாங்கள் இலக்காகி இருப்பதாக அதே அமைச்சர் குறிப்பிட்டிருப்பதையும் அப்பொழுது சுட்டிக் காட்டி இருந்தோம். ஆட்சியாளர்களை எதிர்க்க, குறிப்பிட்ட ஒரு நேரடி நடவடிக்கையை காங்கிரஸ் தலைவர்கள் மேற்கொண்டால் அதை 'அறப்போர்' எனக் குறிப்பிடுவதும், காங்கிரஸ் ஆட்சியாளர்களுக்கு எதிராக அதே நடவடிக்கையை மற்றக் கட்சியினர் மேற்கொண்டு ஒழுகினால், அதையே 'மறப்போர்' எனக் காங்கிரஸ் தலைவர்கள் கூறிடுவதும் வேடிக்கையேயாகும். காங்கிரஸ் தலைவர்களின் போக்கில் காணப்படும் இம்முரண்பாட்டிற்கு ஒரே ஒரு காரணம்தான் உண்டு. அதாவது தாங்கள் தவறு செய்யாதத் திருமேனிகள், மற்றவர்கள் தவறையே செய்யும் குணங்கொண்ட கொடியவர்கள் என காங்கிரஸ் தலைவர்கள் தீர்மானித்துக்கொண்டு இருப்பதுதான் அக்காரணம் ஆகும். நிற்க,

ஆட்சியாளர்களை எதற்கெடுத்தாலும் உதறித் தள்ளி எதிர்ப்புச் செய்வதையே ஒரு அருங் கலையாக சிருஷ்டித்து வளர்த்துவந்த காங்கிரஸ் தலைவர்கள், இன்றும், தாங்களே அதைச் செய்வதிலிருந்து தங்களைவிடுவித்துக்கொள்ளவில்லை. அதைத் தொடர்ந்தே காங்கிரஸ் தலைவர்கள் செய்து வருகின்றனர். ஆனால், அதில் ஒரே ஒரு திருத்தத்தைமட்டும் செய்திருக்கிறார்கள். அதாவது, ஆட்சிப் பொறுப்பில் மற்றக் கட்சியினர் இருந்தால் அவர்களுக்கு எதிராக மேற்படி எதிர்ப்பு நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு சொந்தக் கட்சியினரை ஊக்கியும், ஆட்சிப் பொறுப்பில் தாங்கள் இருந்தால் மட்டும் அத்தகைய எதிர்ப்பு நடவடிக்கைகளை எவரும் கையாளக் கூடாது என இதோபதேசம் செய்தும், ஆட்சியாளர்களுக்கு எதிராகக் கொள்ளப்படும் எதிர்ப்பு நடவடிக்கையில் ஒரு திருத்தம் செய்துள்ளனர் காங்கிரஸ் தலைவர்கள். காங்கிரஸ் தலைவர்களின் விருப்பப்படியே, இத்திருத்தம் காங்கிரஸ் கட்சியினரால் செயலாற்றப்படுவதில்லை. இது விஷயத்தில் காங்கிரஸ் தலைவர்களுக்கு இருந்துவரும் கருத்துக் குழப்பத்தைப் போலவே, மற்றக் காங்கிரஸ் கட்சியினருக்கும் எதிர்ப்புத் திருத்தத்தைச் செயலாற்றுவதிலும் பெருங்குழப்பம் இருந்து வருகிறது.

மலபார் மாவட்டத்தில் உள்ள கொடுவாயூரில் ஒரு உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. அப்பள்ளியில் மேரி ஜோசப் எனும் அம்மையார் ஒரு ஆசிரியையாகப் பணிபுரிந்து வந்தார்; அவருடைய கணவனும் உள்ளூர் அஞ்சல் நிலையத்தில் பணிபுரிந்து வந்தார்.

மாவட்டக் கழகத்தின் நிர்வாகத்தில் நடைபெற்றுவருவது அப்பள்ளி. அப்பள்ளியின் தலைமை ஆசிரியருக்கும், ஆசிரியை மேரி ஜோசப்புக்கும் பிணக்கு ஏற்பட்டது. அப்பிணக்கின் காரணமாக அவ்வாசிரியையை, சிறிது காலம் வேலையிலிருந்து விலக்கி வைத்தார் தலைமை ஆசிரியர். அதை எதிர்த்து மாவட்டக் கழகத்திற்கு ஆசிரியை மனுக் கொடுத்துக் கொண்டார். தலைமை ஆசிரியரின் விருப்பப்படி மாவட்டக் கழகம், மேற்படி ஆசிரியையை வேறு பள்ளிக்கு மாற்றுதல் செய்துவிட்டது. மாவட்டக் கழக மாற்றல் உத்தரவை எதிர்த்து ஆசிரியையும், அவர் கணவனும் பள்ளிமுன் உண்ணா நோன்பு இருந்தனர். அனுமதி பெறாமல் பள்ளிமுன் நுழைந்ததாக இருவர் மீதும் வழக்குத் தொடுக்கப்பட்டது.

இச்சம்பவங்கள் நிகழ்ந்த காலத்தில் மாவட்டக் கழகத்தின் ஆட்சிப் பொறுப்பில் காங்கிரஸ் கட்சியினர் இருந்து வந்தனர். நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சியினர் தோல்வியுறவே, வெற்றிபெற்ற பொதுவுடைமையினர் கைக்கு மாவட்டக் கழகம் மாறிவிட்டது. புதிய மாவட்டக் கழகம், வேறு பள்ளிக்கு மாற்றுதல் செய்யப்பட்டுள்ள மேற்படி ஆசிரியையின் மாற்றுதல் உத்தரவை ஒழித்துவிட்டு, பழைய உயர்நிலைப் பள்ளியிலேயே அவரைப் பணிபுரியக் கட்டளை இட்டிருக்கிறது.

கட்டளைக்கிணங்க கிறிஸ்துமஸ் விடுமுறைக்குப் பிறகு பள்ளிக்கூடம் திறந்ததும் ஆசிரியை மேரிஜோசப் பள்ளிக்கு வந்தார்கள். இதைக் கண்ட மாணவர்களில் பல நூறு பேர் பள்ளிக்கூடத்தை விட்டு வெளியேறி விட்டனர்.

அன்று மாலையே பெற்றோர்கள் கூட்டம் கூடி, மாணவர்களின் வெளியேற்றத்தை ஆதரித்து, ஆசிரியையை வேறு பள்ளிக்கு உடனடியாக மாற்ற மாவட்டக் கழகம் முன்வர வேண்டும் எனவும் தீர்மானித்துள்ளனர்.

ஆசிரியை மேரி ஜோசப்பை வேறு பள்ளிக்கு மாற்றினது காங்கிரஸ் மாவட்டக் கழகம். அம்மாற்றுதல் உத்தரவை ஒழித்து, அதே பள்ளியில் மேற்படி ஆசிரியையை பணிபுரிய உத்தரவிட்டுள்ளது பொதுவுடைமை மாவட்டக் கழகம்.

உத்தரவிற்கிணங்க, பள்ளி வந்த ஆசிரியையைக் கண்டதும் மாணவர்கள் வெளியேறினர். மாணவர்களின் செயலை ஆதரித்து, அவ்வம்மையாரை வேறு பள்ளிக்கு மாற்ற வேண்டுமென அங்குள்ள பெற்றோர்கள் எனப்படுவோர் பொதுவுடைமை மாவட்டக் கழகத்தைக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இவ்வாசிரியை விவகாரத்தில் நடைபெறும் கிளர்ச்சியில், காங்கிரஸ் கட்சியின் பெயர் வெளிப்படையாகக் கூறப்படவில்லையே அல்லாது, இதற்கும் தேர்தலில் தோற்றுப் போன பதவி இழந்து கிடக்கும் காங்கிரஸ் தலைவர்களுக்கும் திரை மறைவில் தொடர்பு கிடையாது என ஒருவரும் கூறத் துணியார். தங்களுக்குத் தேர்தலில் ஏற்பட்டுள்ள எரிச்சலைத் தணித்துக் கொள்வதற்கு, மாணவர்களை பலியிடத் துணிகின்றனர் காங்கிரஸ் தலைவர்கள் என்பதுதான், இம்மாணவர் கிளர்ச்சியில் உள்ள இரகசியம். இதனால் அரசியல் ஒழுக்கம் தேயுமா அல்லது வளருமா என்பதில் முடிவு கூறும் பொறுப்பை வாசகர்களுக்கே விட்டுவிடுகின்றோம். இதை அரசியல் 'ஏட்டிக்குப் போட்டி' எனச் சொல்லாது வேறு எப்படிச் சொல்வது?

அறிவு இயக்கக் கருத்துகளுக்கு 'அரசியல் டாக்டர்கள்' தடை விதிக்கும் மர்மம்?

மதுரை அரசியல் மாநாட்டில் தோழர் மு. கருணாநிதி விளக்கம்

"மக்கள் சக்திக்கு மதிப்பு தராத மந்திரி சபை போக்குக்கு முடிவு காண வேண்டும்"

"வாழ்வா? சாவா?—நாமா? அவர்களா?—என்ற கேள்விக் குறிகளாக இலட்சோப லட்சம் திராவிட காளையர்கள் தென்னகத்து தெருக்களிலே அனல் கக்கும் விழிகளோடு போர் முரசு ஒலித்துக்கொண்டிருக்கும் நேரமிது; இந்த நேரத்திலேதான், மதுரையிலே நாமெல்லாம் கூடுகிறோம். மதுரை—நமது இயக்கச் சரித்திரத்திலே புடம்போட்டு எடுக்கப்பட்ட ஒரு பொன்னேடு; சென்ற திங்கள், நாவலர் பாரதியாரை சந்தித்தபோது சொன்னார்—'திராவிட நாட்டின் தலைநகரம் மதுரையாகத்தான் இருக்க வேண்டும்; அந்தகைய சிறப்பு வாய்ந்த நகரம் மதுரை!'—என்று.

'தென் குலத்தின் வீரத் திருநகரம் மதுரை. ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியப் பாண்டியனை, நீதிக் கொலுவிலே வைத்து தரிசித்த தரணி இந்த மதுரை. கற்புக்கும் காதலுக்கும் இலக்கணமாய், கோப்பெருந்தேவி வாழ்ந்த நகரம் மதுரை. 'முல்லைக் காட்டிலும், ரோஜாக் கொல்லையிலும்கூட முற்புதர்கள் மொய்த்த தரை உண்டே'—அதுபோலத்தான் தலையாய சங்கங்கள் நிறுவி தமிழ் வளர்த்த மதுரையிலே, திருவிளையாடல் புராணங்களின் மகிமைகளையும் காண்கிறோம்; திசை எட்டும் தம் புகழ் பரப்பிய சிலப்பதிகாரத்தின் உச்சக் கட்டமும் இங்குதான்; பிட்டுக்கு மண்சுமந்த கதையும் இங்குதான்.

"பரமன் பன்றி உருவம் எடுத்ததாக மதுரை புராணத்தில்தான் படித்திருக்கிறேன். சில வாரங்களுக்கு முன் சில மனிதர்களும் இங்கு, அந்த உருவம் எடுத்தார்கள் என்று கேள்விப்பட்டேன். ஆரிய-ராம கதையைக் காக்க புறப்பட்டவர்களின் செயல், என் கண் வலியினும் கொடிது. அத்தகைய விபீடணருக்கு அபயமளித்து, அறிவு இயக்கக் கருத்துக்களை நாட்டிலே நடமாடாமல் போசுக்கிவிட சட்டம் செய்துவிட்டோர் செயல், அதனினும் மிகக் கொடிது.

இவ்வாறு, 9—1—55-ல், மதுரையில், சௌந்திரபாண்டியனார் பந்தலில் நடைபெற்ற மதுரை மாவட்ட தி. மு. கழக இரண்டாவது அரசியல் மாநாட்டின் தலைமை உரையில், தோழர் மு. கருணாநிதி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

"உங்கள் ஆசை முகங்களை எல்லாம் பார்க்க இயலாமல் 300 மைலுக்கு அப்பாலிருந்துகொண்டு, பெருமை மிகுந்த இந்த மாநாட்டில் தலைமை வகிக்கிறேன். ஆயிரமாயிரம் வீரர்களும் தாய்மார்களுமாகக் குழுமி இருக்கும் உங்களை நான் காண முடியவில்லை; இங்கு வந்தாலும் காண முடியாது—இரு கண்களையும் திறக்க முடியாத நிலையில் இருக்கிறேன்; என்னைப் போலவே நோய்ப் படுக்கையில் கிடக்கும் எனது அருமை திராவிடத்தை நினைத்தபடியே இருக்கிறேன்.

நான் பேசக்கூடாது என்கிறார்கள் டாக்டர்கள்—இப்போது எழுதவும் கூடாதாம்; படிக்கவும் கூடாதாம்—டாக்டர்கள் தடை போடுகிறார்கள்; நான் நலம்பெற டாக்டர்கள் போடும் தடை இது.

இதேபோல அரசாங்கத்திலும் சில டாக்டர்கள் உலவுகிறார்கள்; அவர்களும் தடை போடுகிறார்கள்—நமது கழகம் பேசவும் கூடாதாம்; எழுதவும் கூடாதாம்; நடிக்கவும் கூடாதாம்; நம் கருத்துக்களை பிறர் படிக்கவும் கூடாதாம்.

எனக்குத் தடை போட்ட டாக்டர்களின் சொல்படி நடந்தால்தான் நான் நலம்பெற முடியும்; ஆனால் இந்த அரசியல் டாக்டர்கள் போடும் தடைகள் நொறுக்கப்பட்டால்தான் நாடு நலம் பெற முடியும்.

முற்போக்குவாதிகளின் குரலுக்கும், மக்கள் சக்திக்கும் மதிப்புத் தராமல் காமராஜரின் மந்திரி சபை 'நாடகத் தடைச் சட்ட'த்தைக் கொண்டு வந்ததையொட்டி நாம் ஒரு தீர்க்கமான முடிவுக்கு வந்தாக வேண்டும்.

புதிய கல்வித் திட்டத்தை ஒழித்ததற்காக நம்மிடமிருந்து பெற்ற பாராட்டுக்களையே கேடயமாக வைத்துக்கொண்டு, காமராஜர், புதிய கணைகள் நம்மீது தொடுப்பதை நிறுத்திக் கொள்வாரா மாட்டாரா, என்ற கேள்விக்கு பதில் தெரிந்தாக வேண்டும்.

'கல்லக்குடி' பற்றி இன்னும் தெளிவான முடிவு அதிகாரபூர்வமாக தரப்படவில்லை. முடியுமா? முடியாதா?—என்ற கேள்விகளை நாம் தொடுக்கும் வரை காமராஜர் வாளாய்த்தான் இருப்பாரா? அல்லது செயலில் இறங்கி அந்தச் செந்தமிழ் சிற்றூருக்கு 'கல்லக்குடி' என்ற பெயரைச் சூட்டுவதற்கு முன்வருவாரா?

"இது அவருக்குச் சிக்கலான பிரச்சினை. நமக்கோ மானம் காக்கும் பிரச்சினை. இதற்கும் ஒரு தெளிவான விளக்கத்தை-நாம் பின் பற்றவேண்டிய வழியை நமது பொதுச் செயலாளர் அவர்கள் வகுத்துத்தர இருக்கிறார்கள். நமது

(4-ம் பக்கம் பார்க்க)

டெலிபோனில் பேசும்போது சிரிப்பது கூடாது!

டேனிஷ் பெண்மணிக்கு அதிகாரிகள் தடை

கோபன்ஹேகன், ஜன. 11— டெலிபோனில் பேசும்போது சிரிப்பது கூடாது என்று டேனிஷ் பெண் ஒருவருக்கு டெலிபோன் இலாகா அதிகாரிகள் தடை விதித்திருக்கின்றனர்.

அப்பெண் சிரித்துப் பேசும்போது அந்த டெலிபோன் லைன் முழுவதும் தொடர்பற்றுப் போகிறதாம்.

இந்த நிலையை ஆராய்ச்சி செய்த அதிகாரிகள், பல தடவை அப்பெண்மணியின் வீட்டிலிருக்கும் டெலிபோனை மாற்றிப் பார்த்திருக்கிறார்கள். டெலிபோன் மாற்றப்பட்ட பிறகு அப்பெண் டெலிபோன் அலுவலகம் சென்று, பரீட்சைக்காக டெலிபோனில் தன் வீட்டிற்குப் பேசுவது உண்டாம்.

சாதாரணமாக அப்பெண் பேசும் வரையில் எந்தவிதமான தொல்லையும் இல்லையாம்; ஆனால், அப்பெண்மணி பேசும்போது ஏதாவது ஒரு காரணத்தை ஒட்டி சிரிக்குமாறு நேரிட்டால் உடனே அந்த லைன் முழுமையும் தொடர்பற்றுப் போகிறதாம்.

இதை எப்படித் தடுப்பது என்று அறிய இயலாத டெலிபோன் அதிகாரிகள், அப்பெண் டெலிபோனில் பேசும்போது சிரிக்கக் கூடாது என்று தடை உத்தரவு போட்டிருக்கிறார்களாம்.

பரூக் மன்னனின் அரண்மனைகள்!

நடனச்சாலைகளாக மாற்றப்படும்

முடி இழந்த பரூக் மன்னனின் அரண்மனைகள் அனைத்தும் சூதாட்டக்கூடங்களாகவும், நாட்டியக்கூடங்களாகவும் மாற்றப்பட இருக்கின்றன. இதற்கான முடிவை எகிப்து சர்க்கார் செய்திருக்கிறது.

இப்படி மாற்றப்படும் சூதாட்டக் கூடங்களிலும், நாட்டியக் கூடங்களிலும், எகிப்து நாட்டின் குடிமகன் யாரையும்—எந்த மதத்தினர் என்றாலும்—உள்ளே அனுமதிக்கக்கூடாது என்று உத்திர விடப்பட்டிருக்கிறதாம்.

அரண்மனைகள், வெளிநாட்டுக் கம்பெனிகளுக்கு வாடகைக்கு விடப்படும் என்று தெரிகிறது. வெளிநாட்டுப் பிரயாணிகளின் நலனுக்காகவே இவைகள் அமைக்கப்படுகின்றன.

சர்க்கார் இப்போது பிறப்பிக்க இருக்கும் புதிய சட்டம் ஒன்றின்படி, சூதாட்டத்திற்கு என்று இப்போது வழங்கப்பட்டிருக்கும் லைசென்சுகள் ரத்து செய்யப்படும் என்றும், பொது இடங்களில் சூதாட அனுமதிக்கப்படமாட்டாது என்றும் தெரிகிறது.

சூதாட்டத்தில் பல உயர்தர அதிகாரிகள் ஈடுபட்டு நாட்டிற்கே அவமானம் தரும் நிகழ்ச்சி ஒன்று எகிப்தில் சமீபத்தில் நடைபெற்றதாம். நான்கு உயர்தர அதிகாரிகளும், மூன்று வெளிநாட்டு வியாபாரிகளும் சூதாடியது பற்றி அவர்கள் வீட்டிலேயே காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்களாம். இவர்கள் விசாரணை செய்யப்படுவார்கள் என்று தெரிகிறது.

கலைந்தது-இணைந்தது!

'பார்வர்டு பிளாக்' கட்சியைக் கலைத்துவிட்டு, அதை காங்கிரஸ் கட்சியுடன் இணைத்துவிடுவதென பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர்கள் முடிவு கட்டிவிட்டனராம்.

இந்த 'பார்வர்டு பிளாக்' கட்சியை நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் 1939-ம் ஆண்டில் நிறுவினார். 1947-ம் ஆண்டில் இந்தக் கட்சி காங்கிரஸ் கட்சியைவிட்டு விலகியது என்பது நினைவிலிருக்கலாம்.

குறுக்கெழுத்துப் போட்டிக்கு

கொடும்பாவி!

தேபர் மாநிலத்தில் நவீனமுறை

ராஜ்கோட்டைக்கு அருகிலுள்ள யுனா எனும் கிராமத்தில் உள்ள மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு குறுக்கெழுத்துப் போட்டிகளின் மீதுள்ள தங்கள் எதிர்ப்பைக் காட்டிக் கொள்ளும் முறையில் 'குறுக்கெழுத்துக் கொடும்பாவி' ஒன்றைச் செய்து அதை ஊர்வலமாக இழுத்துச் சென்று, பின்னர், அக்கிராம மார்க்கெட்டுக்கு அருகாமையில் தீயிட்டுக் கொளுத்தினர்.

குறுக்கெழுத்துப் போட்டிகளைத் தடை செய்யவேண்டுமென்பதற்காக இக்கிராம மக்களனைவரும் சென்ற 4-ந் தேதியன்று ஒன்று கூடி ஒரு எதிர்ப்பு இயக்கத்தை அமைத்திருந்தனர். இவ்வியக்கத்தில், ஏழை—செல்வன் என்ற பேதமில்லாமல் எல்லா மக்களுமே பங்கு பெற்றனராம். இவ்வியக்கத்திற்குக் 'குறுக்கெழுத்துப் போட்டி எதிர்ப்பு லீக்' (ராசனு ஹார்பியாய் விரோதி மண்டல்) என்றும் பெயரிட்டுள்ளனராம்.

மேற்குறிப்பிட்ட 'குறுக்கெழுத்துக் கொடும்பாவி'யான அரக்கன் தீயிலிட்டுக் கொளுத்தப்படுகையில், அங்கு கூடி நின்ற மக்களெல்லோரும், "இந்திய நாட்டிலிருந்து இத்தகைய சமூக விரோதிகளையெல்லாம் ஒழித்துக் கட்டுவோம்" என்று சூளுரைத்துக் கொண்டனராம்!

'சலுகை' காண்பித்த டாக்டருக்கு 'சங்கடம்'

கடந்த கிறிஸ்துமஸ் விழாவின் போது, டிரினிடாட்டில் உள்ள குஷ்டநோயாளிகளை, தொடர்ந்து மூன்று நாட்கள் தங்கள் விருப்பம் போல் எங்கும் சுற்றி வருவதற்கு அனுமதி அளித்தமைக்காக, குஷ்டநோய் மருத்துவச்சாலையில் பணியாற்றிவரும் பிரிட்டிஷ் மருத்துவர் ஒருவர் வேலையிலிருந்து நீக்கப்பட்டுவிட்டாராம்.

விருப்பம்போல் சுற்ற அனுமதி கிடைத்ததும், குஷ்டநோயாளிகள் அனைவரும், சிற்றுண்டிச்சாலைகளிலும், மற்றும் பொது இடங்களிலும் மிக 'தாராள'மாக பொது மக்களுடன் உறவாடிக்கொண்டனராம்!

கைத்தறித் தொழில் அபிவிருத்திக்கு டில்லியின் மானியம்!

திராவிட மாநிலங்களுக்குக் கிடையாது

புதுடில்லி, ஜன. 7— கைத்தறித் தொழில் அபிவிருத்திக்காக மேலும் மானியங்களையும், கடன்களையும் இந்திய சர்க்கார் பல்வேறு மாநிலங்களுக்கு அளித்திருக்கிறார்கள்.

ஹைதராபாத்துக்கு ரூ. 20,73,250 கடனாகவும், ரூ. 8,000 மானியமாகவும் வழங்கப்பட்டிருக்கிறது.

பம்பாயிக்கு ரூ. 4,03,100 ரூபாய் கடனாகவும், ரூ. 20,000 மானியமாகவும் கிடைக்கிறது.

உத்திரப் பிரதேசத்துக்கு, ரூ. 37,350 கடனாக அளிக்கப்பட்டிருக்கிறது.

அஜ்மீருக்கு ரூ. 25,685 மானியமளிக்கப்பட்டிருக்கிறது.

பெப்சு அரசாங்கத்துக்கு ரூ. 20,000 கடனாகவும், ரூ. 1,250 மானியமாகவும் அளிக்கப்பட்டிருக்கிறது.

சௌராஷ்டிரத்துக்கு, ரூ. 10,250 கடனாகவும், ரூ. 5,500 மானியமாகவும் கிடைத்திருக்கிறது.

மணிப்பூருக்கு ரூ. 8,424 மானியமாகக் கிடைக்கிறது.

மத்திய பாரத் மாநிலத்திற்கு ரூ. 3,920 கடனளிக்கப்பட்டிருக்கிறது.

[குறிப்பு:—திராவிட மாநிலங்களுக்கு இந்தத் தொடர்பில் எந்த உதவியும் அளிக்கப்படாதிருப்பதைக் காணலாம்.]

இரங்கூன் மேயர் மீது வழக்கு

டிட்டோ வருகையின்போது நகரில் யூகோ கொடிகள் பறந்தது குற்றமாம்!

இரங்கூன், ஜன. 9— இரங்கூன் நகர மேயர் உள்பட இரங்கூன் நகரசபையின் மீது சட்டத்தை மீறி நடந்துகொண்டதாக சிவில் வழக்கொன்று தொடரப்பட்டிருக்கிறதாம்.

இரங்கூன் நகர ஸ்குவாட்டர்ஸ் சங்கத்தின் தலைவர் இந்த வழக்கைத் தொடர்ந்திருக்கிறார்.

யூகோஸ்லவேகியா குடியரசின் தலைவர் மார்ஷல் டிட்டோ ஜனவரி 6-ந் தேதியன்று இரங்கூன் வந்திருந்தபோது அவருக்கு இரங்கூன் நகரசபை அளித்த வரவேற்பினை ஒட்டி இந்த வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது.

பர்மிய நாட்டுச் சட்டப்படி வெளிநாட்டுக் கொடிகளை பர்மிய எல்லைக்குள் பறக்கவிடுவது மிகவும் கடுமையாகத் தடுக்கப்பட்டிருக்கிறது.

மார்ஷல் டிட்டோவுக்கு தரப்பட்ட வரவேற்பின்போது இரங்கூன் நகரம் முழுவதும் ஏராளமான பர்மிய, யூகோஸ்லவேகியா கொடிகள் பறக்கவிடப்பட்டனவாம். அதுமட்டுமின்றி, பள்ளிச் சிறுவர்களிடம் ஏராளமாக யூகோஸ்லவேகிய கொடிகள் கொடுக்கப்பட்டு, டிட்டோவின் வருகையின்போது குழந்தைகள் அவரை வரவேற்குமாறு செய்யப்பட்டதாம்.

இப்படி சட்டத்தை மீறி, வெளிநாட்டுக் கொடி ஒன்றை இரங்கூனில் பறக்கவிட்டமைக்காக இரங்கூன் நகரசபையின் மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது.

எலிகளைக் கொல்ல ஊரே திரளுகிறது

அகமதாபாத் அருகே புதிய முயற்சி

அகமதாபாத், ஜன. 11— அகமதாபாத் மாவட்டத்தில் உள்ள 'தண்டுகா' என்னும் கிராமத்தில், எலிகளின் தொந்திரவைச் சமாளிக்க முடியாமல், அவைகளைக் கொன்று குவிப்பது என்று ஊர்மக்கள் முடிவு செய்திருக்கிறார்களாம்.

ஜனவரி 15-ந் தேதி காலை 8 மணிக்குத் துவங்கி, ஊர் மக்கள் எல்லோரும் எலிகளைக் கொன்று குவித்து அவைகளை மறுநாள் மாலை புதைக்க இருக்கிறார்கள்.

இதற்கு முன்னர் தனித் தனியாகப் பலர் முயற்சி செய்து எலிகளைக் கொல்ல எத்தனித்தது பலிக்கவில்லையாம்.

"எலிகளைக் கொல்வது பாவம்" என்று கருதிய பலர், எலிகளைக் கொல்ல கொடுக்கப்பட்ட விஷ மாத்திரைகளைப் பயன்படுத்தாமல், எலிகளை அடுத்த வீடுகளை நோக்கித் துரத்திவிட்டார்களாம்.

இப்படி எலிகளை ஒரேயடியாகக் கொலை செய்யும் முயற்சியில் ஒத்துழைக்குமாறு நகரசபையைக் கோரி உள்ளனர் என்று தெரிகிறது.

மது ஒழிப்பு இயக்கம்

தீவிரமாக்க பிரெஞ்சு பிரதமர் முயற்சி

பிரெஞ்சுப் பிரதமர் மெண்டே பிரான்ஸ், பிரான்சில் நடத்திவரும் மது ஒழிப்பு இயக்கத்தை மேலும் தீவிரமாக்குவதற்கென பிரெஞ்சு சர்க்கார் புதுப்புது நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்துப் பரிசீலனை செய்து வருகிறதாம்.

இந்த நடவடிக்கைகளின்படி, மது சத்துக்கள் கலந்துள்ள மருந்துகளை உபயோகிப்பவர்கட்கு அளிக்கப்படும் தண்டனை இன்னும் அதிகமாகக் கடுமையானதாக்கப்படுமெனவும், மதுக்கலப்பு ஏதும் இல்லா குடிநீர் பானங்கள் தயாரிப்புக்கு அதிக ஊக்கம் அளிக்கப்படுமெனவும், பழ ரசங்களுக்குத் தீர்வை குறைக்கப்படுமெனவும் கூறப்பட்டுள்ளது.

1954—55-ம் ஆண்டுப் பருவத்துக்குக் கணக்கிடப்பட்டுள்ள வெள்ளைச் சர்க்கரை உற்பத்தி அளவு, முந்திய பருவத்தைக் காட்டிலும் 80 சதவிகிதம் அதிகமாகும்.

புராணம் கூறும் தண்டகாரண்யம் சோடாநாகபுரியாம்!

பீகார் அதிகாரிகளிடையே திராவிட மொழிப் பண்பு!

பரோடா, ஜன. 11— ஒரிசா மாவட்டத்தில் உள்ள சுந்தர்காரில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நான்கு குகைகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றனவாம்.

தாதப்பட்டா மஜூம்தார் என்பவர் அப்பகுதியின் மாவட்ட அதிகாரியாக இருந்தபோது அவர் இக்குகைகளைக்கண்டுபிடித்தாராம். இச்செய்தியை இங்கு நடைபெற்ற இந்திய விஞ்ஞான காங்கிரசில் அவர் படித்த அறிக்கை ஒன்றில் தெரிவித்தார். இக்குகைகளில், ஓவியங்கள், சிற்பங்கள், சிலாசாசனங்கள், மற்றும் சரித காலப் பொருள்கள் பல இருக்கின்றனவாம். இவைகள் பற்றி மேற்கொண்டு ஆராய்ச்சி செய்ய நிபுணர்களை அனுப்புமாறு புதை பொருள் இலாகாவிற்குத் தாம் எழுதியதாகவும், தன்னை வேறு இடத்திற்கு மாற்றிவிட்டதால் அவை பற்றித் தன்னால் மேற்கொண்டு விபரங்களை நேரில் சேகரிக்க முடியவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

குகைகள் காணப்படும் இப்பகுதிக்கு அங்கே வாழும் மக்கள் புராண ஆதாரம் சொல்கிறார்களாம். முற்காலத்தில் இருந்ததாகச் சொல்லப்படும் 'தண்டகாரண்யம்' என்னும் காடு இதுதான் என்றும், லட்சுமணன், சீதை என்பவர்கள் இங்கே வாழ்ந்தார்கள் என்றும் சொல்லப்படுகிறதாம்.

மஜூம்தார், இப்பகுதிகள் பற்றிய புகைப்படங்களையும் பார்வைக்கு வைத்தார்.

அஷுடோஷ் பட்டாச்சாரியா என்னும் மற்றொரு நிபுணர், பீகாரில் வாழும் 'பிர்ஜியாஸ்' என்னும் ஆதிவாசிகளின் நிலை பற்றிய விபரங்களைத் தந்தார்.

இந்தக் காட்டு மனிதர்கள் அங்கே வாழ்வதை இதுவரை யாரும் அறிந்துகொள்ளவே இல்லையாம்.

சோடா நாகபுரிபகுதியில் உள்ள அடர்ந்த காடுகளில் அவர்கள் வாழ்கிறார்களாம். அவர்கள், சொந்தமான தனி மொழி ஒன்றைப் பேசுகிறார்கள் என்றும், அந்த மொழியின் அமைப்பும் தென்னாட்டு மொழிகளின் அமைப்பைப் போன்று இருக்கிறது என்றும் பட்டாச்சாரியா தெரிவித்தார். அவர்கள் மொத்தம் 3,000 பேர் இருக்கிறார்களாம்.

சர்க்கார் இக்காடுகளை 'ரிசர்வ்' காடுகளாக்கியிருப்பதால், இந்த ஆதிவாசிகள் இப்போது தொல்லைக்குள்ளாகியிருக்கிறார்களாம்.

'மிருகத்தனமான அடக்குமுறைகள்!'

அல்ஜீரியா நிலைமை பற்றி ஐ. நா. சபையில் புகார்

"அல்ஜீரியாவிலுள்ள தற்போதைய நிலைமைகள் உலக சமாதானத்திற்கும், பாதுகாப்புக்கும் ஆபத்தை விளைவிக்கக் கூடியவையாக இருக்கின்றன," என்று குறிப்பிட்டு சவூதி அரேபிய தூதுக் குழுவினர் ஐ. நா. பாதுகாப்புச் சபையினரிடம் குறிப்பு ஒன்றை தாக்கல் செய்துள்ளதாகத் தெரிகிறது.

பிரிட்டனின் அரேபிய தூதுவராலயம் இதுபற்றிக் குறிப்பிடுகையில், தாங்கள், அல்ஜீரிய நிலை பற்றி ஐ. நா. பாதுகாப்புச் சபை விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளதாகவும், அல்ஜீரிய மக்களின் தேசிய எழுச்சியை, யெல்லாம் பிரெஞ்சு சர்க்கார் ஒடுக்க முனைந்து விட்டிருக்கிறதென்பதைக் குறிப்பிட்டுள்ளதாகவும் தெரிவித்திருக்கிறது.

அல்ஜீரிய நிலை பற்றி, மேலும், 'நியூயார்க் டைம்ஸ்' இதழ், 'கடந்த 30 ஆண்டுகளில், இதற்கு முன் கண்டிராத அளவுக்கு பிரெஞ்சு சர்க்காருக்கு எதிராக அங்கே எதிர்ப்புகள் ஏற்பட்டுக் கிடக்கின்றன; பிரான்சின் 'இராணுவக் கெடுபிடி'களும், 'மிருகத்தனமான' அடக்குமுறைக் கொடுமைகளும் அங்கே தலைவிரி கோலமாகக் காட்சியளிக்கின்றன' என்று குறிப்பிட்டிருக்கிறது.

பாஷானி பற்றி பாக். அமைச்சர்கள்

கராச்சி, ஜன. 9— பாகிஸ்தானிலுள்ள அவாமி லீகின் தலைவரான பாஷானி மேற்கொள்ளுகின்ற எந்த ஒரு நடவடிக்கையும், பொதுமக்களின் அமைதிக்கோ, அல்லது நாட்டின் நலனுக்கோ பங்கம் விளைவிப்பதாகக் காணப்படுமானால் அவர் கைது செய்யப்படுவார் என்று பாகிஸ்தான் முதலமைச்சர் முகமதலி தெரிவித்திருக்கிறார்.

தற்போது இந்தியாவிலேயே இருக்கும் அவர், பாகிஸ்தான் எல்லைக்குள் நுழைய எவ்விதத் தடையுமில்லை என்றும் அவர் மேலும் குறிப்பிட்டிருக்கிறார்.

பாஷானி பற்றி பாகிஸ்தான் உள்நாட்டமைச்சர் இஸ்கந்தர் மிர்ஸா குறிப்பிடுகையில், பாஷானி, தமது சொந்த சொத்துக்களைக் கவனிப்பதற்காக அசாமிற்குப் போவதாகக் கூறுகிறார்; ஆனால், பதிமுதல் செய்யப்படாத பாகிஸ்தான் சொத்து ஏதும் இந்தியாவில் இருப்பது சாத்தியமற்றதாகும்; எனவே, அவர் இன்னும் ஒரு இந்தியக் குடிமகனாக இருந்துவருவதாகவே தெரிகிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

வாக்காளர்கள் பட்டியல்

தமிழிலேயே வெளியிட முடிவு

சென்னை, ஜன. 9— இவ்வாண்டில், சென்னை நகரத்திலுள்ள மொத்த வாக்காளர்களின் பெயர்ப்பட்டியல் சரிபார்க்கப்பட்டு விட்டுப்போனவர்களின் பெயர்களையெல்லாம் சேர்த்து மீண்டும் அச்சிடுவது என்று சென்னை சர்க்கார் முடிவு கட்டியிருப்பதாகத் தெரிய வருகிறது.

வருகிற 1957-ம் ஆண்டில் அடுத்த பொதுத் தேர்தல் நடைபெறவிருக்கின்றமையால், வாக்காளர்களின் பெயர்ப்பட்டியல் சரிசெய்யப்பட வேண்டுமென சர்க்கார் கருதியுள்ளதாம்.

மேலும், இங்கு குறிப்பிடத்தக்கது என்னவெனில், சென்னை நகரத்திலுள்ள வாக்காளர்களின் பெயர்களையெல்லாம் தமிழிலேயே அச்சிட வேண்டுமென்பதற்காக இந்திய தேர்தல் கமிஷனின் சம்மதத்தைக் கேட்டுக்கொள்வதென முடிவு செய்துள்ளதாகும்.

சமூக சீர்திருத்த மாநாடு

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மதங்கள், மற்றும் இந்து மதத்திற்குள்ளேயே பிரம்ம ஞான மதம், சைவ மதம், வைணவ மதம் என்று இப்படியாக உள்ள எண்ணற்ற மதங்களைக் கூறி, அவை ஒவ்வொன்றும் என்ன என்ன தத்துவங்களை—கொள்கைகளைக் கொண்டது என்பதையும் விளக்கி, ஒவ்வொரு மதத்தின் தத்துவமும் எப்படி இன்னொரு மதத் தத்துவத்துடன் முரண்பட்டிருக்கிறது என்பதைத் துலங்கவைத்து, 'எம்மதமும் சம்மதமே எமக்கு' என்ற புரட்டு, மக்களை ஏய்ப்பதற்கேயன்றி, வேறெதற்கும் இல்லை என்பதையும் அம்பலப்படுத்தி, மதத் தத்துவங்கள் மக்கள் முயற்சி செய்து வாழ்க்கையில் முன்னேற வொட்டாது எப்படித் தடுக்கின்றன என்பதையும் விளக்கி, அந்த நிலை மாறி, மனிதர்கள் அறிவு பூர்வமாகச் சிந்தித்து முயற்சி செய்து வாழ்வில் முன்னேற்றங் காண, மதத் தத்துவங்கள், மக்களிடமிருந்து அகற்றப்பட்டு—அழிக்கப்பட வேண்டும் என்று எடுத்துரைத்தார்.

அத்துடன் இடைவேளைக்காக மாநாடு கலைந்தது.

மாலை நிகழ்ச்சிகள், இசைமுரசு நாகூர் அனீபா, தோழியர் பி. எஸ். செல்வா ஆகியோரின் இன்னிசை முழக்கத்துடன் 3 மணி சுமாருக்குத் துவங்கின.

தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள், திராவிடரின் 'விடுதலை வேட்கை'யை விரிவாக எடுத்துக் கூறினர். எந்த அரசியலும் நிலை பெற்று நிற்க, மக்கள், அவ்வப்பொழுது சீர்திருத்தப்பட வேண்டும் என்பதை எடுத்துக் காட்டினர்.

பின்னர் தோழர் சிவநேசம் அவர்கள் சிறிது நேரம் பேசியதும், தோழியர் அருள்மொழி அவர்கள், கோலோச்சுபவனிடம் கோமாளிக்கூத்தனயிருந்த தெனாலிராமனின் ஒரு கோமாளிச் செய்கை, எப்படி பார்ப்பன எதிர்ப்பை வெளிக்காட்டுகிறது என்ற 'கதை'யைக் கூறினர்.

"காலமும் கருத்தும்" என்ற தலைப்பில், சிறிது நேரம் தோழர் க. அறிவழகன் பேசினர்.

தோழர் என். வி. நடராசன் அவர்கள், "அன்றும் இன்றும்" என்ற தலைப்பில், வளர்ந்துவரும் தி. மு. கழகத்தின் கடந்தகால வளர்ச்சி வரலாற்றை வெகு சிறப்பாக, தமக்கே உரித்தான பாணியில் எடுத்தியம்பினர்.

பின்னர், தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., அவர்கள், "சமூகம் திருந்தவும், மக்கள் பகுத்தறிவு பெறவுமான சட்டங்களை இயற்ற வேண்டிய பெரும் பொறுப்புள்ள சர்க்கார், திருந்தி வரும் சமூகத்தைத் திருந்தவொட்டாமல் செய்ய, தடுப்புச் சட்டங்களை இயற்றி வருவது விந்தையாயிருக்கிறது; வேதனை தருவதாயுள்ளது மதச் சார்பற்ற சர்க்கார் என்ற அரசியல் சட்டத்தின் நோக்கம் நாளுக்கு நாள் சிதைந்து வருகிறது—அரசாங்கத்தின் ஆகாத போக்கால், பழமையையும், மதக் கருத்துக்களையும் பாதுகாக்க சட்டமியற்றும் போக்கால்" என்று முழங்கினர்.

இறுதியாக தோழர் அ. பொன்னம்பலனர் அவர்கள், "எண்ணவும், எண்ணியதை எடுத்துச் சொல்லவும் இயலாத அந்த நாட்களில், இருபத்தைந்தாண்டுகளுக்கு முன்பு நாம் துவங்கிய சீர்திருத்தப் பணி இன்று வெற்றிபெற்று வருகிறது—மக்களால் வரவேற்கப்படுகிறது—இடைவிடாத நமது பணி, புராணப்படி புண்ணிய க்ஷேத்திரங்களில் ஒன்றான மதுரை மாநகரில் இவ்வளவு பெரிய அளவில், பிரம்மாண்டமானதோர் பந்தலில், சீர்திருத்த மாநாடு நடைபெறுவதன் மூலம் எத்தகையது என்பதை நன்கு எடுத்துக்காட்டுகிறது," என்று கூறிவிட்டு, மக்களின் மடமையை மாய்க்கவும், மத நம்பிக்கையைத் தகர்த்து மக்கள் முயற்சியில் நம்பிக்கை வைக்கவும், உயர்ந்தவன்—தாழ்ந்தவன் என்ற நிலை மாறவும் கழகம் என்ன சொல்கிறது என்பதை விளக்கிக் காட்டினர்.

அடுத்து, தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள், 'சமூக சீர்திருத்தம் என் அவசியம்' என்பதைத் தக்க காரணங்களுடன் விளக்கி, அரியதொரு சொற்பொழிவு நிகழ்த்தினர்.

இறுதியாக தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், பக்தி நெறி—பகுத்தறிவு நெறி இவை இரண்டிற்குமுள்ள வேறுபாடுகளை எடுத்துக்கூறி, 'முன்னையது, மக்களை வாழவைக்காது; பின்னையது, மக்களை வாழவைக்கும்,' என்பதைத் தர்க்க ரீதியாக விளக்கினர்.

இத்தருணத்தில் மழை பொழியவே, அவர், தமது உரையைச் சுருக்கிக்கொள்ள வேண்டியதாயிற்று.

இரவு 10 மணியளவில், எஸ். எஸ் இராசேந்திரன் குழுவினரின் 'சந்திரமோகன்' நாடகம் சிறப்பாக நடைபெற்றது.

தடைகள் நீக்கம்

காரைக்கால், ஜன. 11—

முன்னாள் பிரெஞ்சிந்தியத் திட்டுக்களை சுற்றிலுமுள்ள சுங்கவேலி கட்டுப்பாடுகள் யாவும் நீக்கப்பட்டுவிட்டன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரியை இந்திய யூனியனிலிருந்து பிரித்துவிடுவதற்கான தடைகள் யாவும் நீக்கப்பட்டுவிட்டன என்றும், முக்கிய போக்குவரத்துச் சாலைகளிலெல்லாம் சுங்க இலாகாவினர் போட்டிருந்த கதவுகள் யாவும் திறந்துவிடப்பட்டன என்றும் கூறப்படுகிறது.

இதுபோலவே இரயில் பிரயாணிகளைச் சோதிப்பதும் நிறுத்தப்பட்டுவிட்டதாம். கண்டமங்கலம் இரயில் நிலையத்தில், இரயில் பிரயாணிகளெல்லாரும் சுங்க இலாகாவினரின் சோதனைக்குள்ளாகாமல் முதல் தடவையாக வந்தனர்.

மு. கருணாநிதி தலைமைப் பேச்சு

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

திராவிடத்தை மீட்க இன்று நாமெல்லாம் இங்கு அணிவகுத்து நிற்கிறோம்.

அடுத்த கிழமை, சென்னையிலே, திராவிடத்தில் ஊன்றிய ஏகாதிபத்தியக் கால்டியை பலப்படுத்திக் கொள்ள ஆவடியிலே கூடுகிறார்கள் வடநாட்டு சீமான்கள்.

இதோ! சேரனின் படை தன் தினவெடுத்த தோள்களைத் தட்டிப் பார்க்கிறது.

நாளை ஆவடியிலே கனக—விசயன் படை எட்டிப்பார்க்க இருக்கிறது.

சரித்திரம் மாறுகிறது தோழர்களே, சரித்திரம் மாறுகிறது!

இமயத்தின் முடியிலே அடி வைத்தவன் திராவிடன். அன்று அவன் கொடிக்கு கும்பிடு போட்டவர்கள் இன்று திராவிடத் தரணியிலே பவனிவரப் போகிறார்கள், ஆவடித் திருவிழாவின்போது.

நம் வீட்டில் கொள்ளையடித்தவன், பங்கு போட்டுக் கொள்ள நம் வீட்டின் கூடத்தையே வாடகைக்குக் கேட்டானும்! அதற்கும் ஆவடிக்கும் அதிக வித்தியாசமில்லை.

ஆவடிகள் நடந்தே தீரும்—தென்னகம் வடக்கு நோக்கிக் காவடி எடுக்கும் வரையில் ஆவடிகள் நடந்தே தீரும்.

இந்நிலை மாற, சத்திரம் சாவடிகளில் கிடப்போரிலிருந்து—பெரியோர், இளைஞர், தாய்மார்கள் உள்பட — திராவிடரின் அணிவகுப்பு, தெற்கு திசையை மீட்க நெஞ்சிலே உறுதி ஏந்தவேண்டும்!

அந்த உறுதி ஏந்தும் நல்ல நாளாக இந்த நாள் அமையட்டும்.

போர்க் குணம் படிந்த உங்கள் நல்ல இருதயங்கள் திராவிடத்தை மீட்கட்டும்.

இங்கே அந்த எழுச்சிப் பண் எனக்கு நோய் தீர்க்கும் மருந்தாக அமையட்டும்."

பிள்ளையார் திருடிய பிள்ளைகள்!

திருடப்பட்ட பிள்ளையாருக்கு சக்தி அதிகமாம்!

போலீசார் உதவியால் சிலை பிழைத்தது!

சென்னை, ஜன. 10—

சென்னை தண்டையார்பேட்டை கும்பாளம்மன் கோவில் தெருவுக்கும்—குப்பம் ரோடுக்கும் இடையேயுள்ள ஒரு சிறுகோவிலில் பதிக்கப்பட்டிருந்த பிள்ளையார் உருவச்சிலை ஒன்றை திருட முயற்சித்தார்களென்று முனியன், தங்கவேலு என்ற இரண்டு சிறுவர்கள் போலீசாரால் கைது செய்யப்பட்டனர்.

"புதிதாகக் கட்டப்படும் கோவிலில், பழைய கோவிலில் உள்ள பிள்ளையார் சிலை ஒன்றைப் பெயர்த்து வந்து வைத்தால் அந்தப் பிள்ளையார் சிலைக்கு ஏராளமான சக்தி இருக்கும்" என்று அப்பகுதியில் ஒரு நம்பிக்கை இருக்கிறதாம்!

இப்போது, மணியகார் சத்திரத் தெருவில் புதிய கோவில் ஒன்று கட்டப்படுகிறது; இப்புதிய கோவிலில் வைப்பதற்காகத்தான், பழைய கோவிலில் உள்ள பிள்ளையார் சிலையைத் திருட மேற்படி இரண்டு சிறுவர்களும் முயற்சித்தார்கள் என்று தெரிகிறது.

சிலையைத் திருட அவர்கள் முயற்சித்தபோது, அருகில் குடியிருக்கும் மக்களில் சிலர் இச்சிறுவர்களைப் பிடித்து போலீசாரிடம் ஒப்படைத்தனராம்.

இவர்கள் எழும்பூர் சிறுவர்கள் விடுதிக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள்.

சப் - இன்ஸ்பெக்டர் ஸ்ரீதர நாடார் புலன் விசாரணை செய்து வருகிறார் என்று தெரிகிறது.

திரு-த. நா. கா. வழக்கு

ஜாமீனில் ஐவர் விடுதலை

நாகர்கோவில், ஜன. 10—

திரு—தமிழக இணைப்புப் போராட்டத்தின் காரணமாக தி. த. நா. காங்கிரசார் மீது தொடரப்பட்ட இரண்டு வழக்குகளும், இன்று தக்கலை விசேட கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கு சம்மந்தப்பட்டவர்களில் எஸ். எஸ். எல். சி. தேர்வுக்கு ஏற்கனவே பணம் கட்டியிருந்த மாணவர் ராஜாமணி, ஆசிரியர் அம்புரோஸ், பஞ்சாயத்துக் குழு தலைவர் அந்தோணி உறுப்பினர்கள் டேனியல், மானுவேல் ஆகிய ஐந்து பேர்களும் ஜாமீனில் விடுவிக்கப்பட்டனர்.

போராட்டத்தின்போது, வேதக்கண்ணு தஸ்வியன் என்பவரது வலது கையில் குண்டு பட்டதால் இரண சிகிச்சை செய்யப்பட்டு கை வெட்டியெடுக்கப்பட்டது: அதனால் அவர் மிகவும் அவதியுறுவதால் சொந்தமாகவே சிகிச்சை செய்துகொள்ள வசதிகள் செய்து தரப்படவேண்டுமென கோரி அவரது சார்பில் வக்கீல் திரு. மோசஸ் ஜாமீன் விடுதலை மனுவைத் தாக்கல் செய்தார். இது சம்பந்தமாக மாஜிஸ்திரேட், சர்க்காருக்கு 'நோட்டீஸ்' பிறப்பித்துள்ளார் என்று கூறப்படுகிறது.

மாஜிஸ்திரேட் கோர்ட்டிலிருந்து வழக்கு சம்பந்தமான தஸ்தாவேஜுகள் வரவில்லையாதலால் வழக்கை விசாரிக்க முடியாமற்போய்விட்டதென்றும், வழக்கு மீண்டும் 20-ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்றும் தெரியவருகிறது.

அரசியல் மாநாடு

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வாசித்துவிட்டு, தோழர் ராஜு மாணிக்கம் அவர்கள் தலைமை உரை நிகழ்த்தினர்.

பின்னர் தோழர் கே. ஏ. மதியழகன் அவர்கள் நீண்டதோர் உரை நிகழ்த்தினர்.

அடுத்து, தோழர்கள் சுரதா, எஸ். எஸ். இராசேந்திரன் ஆகியோர் பேசினர்.

அத்துடன் மாநாடு இடைவேளைக்காக கலைந்தது.

நிகழ்ச்சிகள் மீண்டும் மாலை 3-மணிக்கு புனுகு நடராசன், நாகூர் அனீபா ஆகியோரின் இசை முழக்கத்துடன் துவங்கிற்று.

பின்னர், மாநாட்டின் வரவேற்புக் குழுவினர் உருவாக்கிய தீர்மானங்கள் பலவற்றை கழக முன்னணி வீரர்கள் பலரும் முன்மொழிந்தும், வழிமொழிந்தும் பேசினர்.

அடுத்து, தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் சீரியதோர் சிறப்புரை நிகழ்த்தினர்.

மாநாட்டுச் செயலாளர், மாநாடு வெற்றிகரமாக நடைபெற ஒத்துழைத்த அத்தனை பேருக்கும் மாவட்ட வரவேற்புக் குழுவின் சார்பில் நன்றியறிதலைத் தெரிவித்து உரை நிகழ்த்தியதும், பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள், பெருத்த மகிழ்ச்சி ஆரவாரப் பேரொலிக்கிடையே எழுந்து, கருத்துரை வழங்கினர்கள்.

இறுதியாக இரவு 10 மணியளவில் தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் குழுவினரின் 'ஆசை நினைவு' எனும் நாடகம் சிறப்புற நடத்தப்பட்டது.

★

இரு நாட்களிலும் ஐம்பதாயிரத்துக்கு அதிகமான மக்கள்—ஆயிரக்கணக்கான பெண்கள் உட்பட கலந்து கொண்டனர். மாநாட்டின் மிகப் பெரிய பந்தலும், அது நிரம்பக் கூடியிருந்த மக்களும் கழகத் தோழர்களின் எழுச்சியும், 'இதென்ன மாநில மாநாடோ' என்ற ஆச்சரியத்தை அளித்தன.

மாநாட்டிற்கு வந்திருந்தோருக்கு பந்தலுக்கருகிலேயே சிறந்த உணவு வசதிகள் செய்யப்பட்டிருந்தன. பல்லாயிரவர் ஒரே நேரத்தில் உண்ணுவதற்கான ஏற்பாடுகளை வெகு சிறப்பாகச் செய்திருந்தனர்.

மாநாட்டுப் பந்தலுக்குள் எப்பக்கம் திரும்பினும், கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்களின் மணிமொழிகள், குறட் கருத்துக்கள் பொறிக்கப்பட்ட அட்டைகள் தொங்கிக்கொண்டிருந்தன.

மாநாட்டிற்கு நகரத்தின் பல பகுதிகளிலிருந்தும் விசேஷ பஸ் வசதி செய்யப்பட்டிருந்தது.

தொண்டர்கள்—இரு வண்ண நிறச் சட்டையுடன், அயராமல்—சலியாமல் பணி புரிந்தனர். பந்தலுக்குள் அந்தத் தொண்டர்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முறை கண்ணையும் கருத்தையும் கவர்ந்தது.

தோழர் முத்து அவர்களும் அவரைச் சார்ந்த எண்ணற்ற தோழர்களும் செலவிட்ட உழைப்பு கணக்கிலடங்காதது, கண்டு வியக்கத்தக்கது என்பதை மாநாட்டின் மகத்தான வெற்றி எடுத்துக்காட்டிற்று.

'மாநில மாநாட்டினை எங்கள் மதுரையில்தான் நடத்த வேண்டும்; மாநில மாநாட்டுப் பணியினைச் சிறப்புறச் செய்து முடிப்போம் என்பதற்கு, இதோ, எங்கள் மாவட்ட மாநாட்டின் வெற்றி முழக்கமே சான்று' என்று

கைத்தறி விற்பனை

12—1—55 பிற்பகல் 2 மணியிலிருந்து, மீர்சாகிப்பேட்டையிலும், இராயப்பேட்டையிலும் சென்னை 43-வது வட்ட தி. மு. கழகத் தோழர்கள் தெருத் தெருவாகச் சென்று கைத்தறித் துணிகளை விற்பனை செய்வார்கள்.

சென்னை 4-வது வட்ட தி.மு.கழக உறுப்பினர்கட்கு

12—1—55 இரவு 8 மணிக்கு, சென்னை 4-வது வட்ட தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம் கழக நிலயத்தில் நடைபெறும். அதுபோது, பொங்கல் விழா, வரவு-செலவு ஆகியவை பற்றி தீர்மானிக்கப்படும்.

கட்டுரை, பேச்சுப் போட்டி

13—1—55 அன்று, புதுச்சேரி மாதாகோயில் தெரு, மங்களகான சபா கட்டிடத்தில், புதுச்சேரி திராவிடர் முன்னணிச் சார்பில் பொங்கல் திருநாளை முன்னிட்டு காலை 9 மணி முதல் 10 மணி வரை கட்டுரைப் போட்டியும், மாலை 4 மணி முதல் பேச்சுப் போட்டியும் நடைபெறும்.

க. அன்பழகன்

சுற்றுப்பயணம்

ஜன. 13: பாலக்காடு
14: கோவை
15: காலை: ஈரோடு
மாலை: சென்னிமலை
16: காலை: துறையூர்
மாலை: திருச்சி
17: உரத்தநாடு
18: சென்னை

தோழர் க. அறிவழகன் அவர்களும் சுற்றுப்பயணத்தில் கலந்து கொள்வார்.

'துண்டு' விழுகிறதாம்!

அடுத்த ஆண்டு, சென்னை மாநில வரவு—செலவுகளில் (பட்ஜெட்) 3½ கோடி ரூபாய்க்கு மேல் துண்டு விழுமென்று சென்னை நிதியமைச்சர் கனம் சுப்பிரமணியம் கூறியிருக்கிறார்.

சென்னை மாநிலத்தில் ஏற்பட்ட நிலப் பிரிவினைகள் (ஆந்திரப் பிரிவினை) பஞ்சம், வெள்ளச் சேதங்கள் ஆகியவற்றால்தான் சென்னை மாநிலத்தில் பொருள் (நிதி) பற்றாக்குறையாகிவிட்டதாம். அது மட்டுமல்லாமல், மாநில வரவு — செலவு கணக்குகள் தயாரிக்கப்பட்டபோது கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்ட பல வரி விதிப்பு நடவடிக்கைகளெல்லாம் பின்னால் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அவர் கூறினர்.

முதலாவது ஐந்தாண்டுத் திட்ட வேலைகளில் 72 சத விகிதம் முடிந்துவிட்டன என்றும், இன்னும் மீதியான வேலைகளையெல்லாம் செய்து முடிக்க மேற்கொண்டு ரூ. 32 கோடி செலவாகுமென்றும், குறிப்பிட்ட காலத்திற்குள்ளாகவே திட்டங்கள் யாவும் நிறைவேற்றப்பட்டு விடுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றி இன்னும் திட்டமான முடிவு எதுவும் செய்து கொள்ளப்படவில்லை என்றும், என்றாலும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் சென்னை மாநிலத்திற்கு ரூ 200 கோடி ஒதுக்குவதென திட்டமிட்டுள்ளது.

அவர்கள் கூறுகிற அளவுக்கு மாநாடுகள் நடைபெற்றன என்றால், மாநாட்டின் சிறப்பைப் பற்றி எழுதியா காட்ட வேண்டும்?

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ, அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என் அண்ணாதுரை, எம். ஏ.,